**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 5** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father / Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | 18-46, பட்டுநூல் மேல ராஜ வீதி, மானம்புசாவடி |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | ஆசாரி |
| Age | : | 25 /2021 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20 .10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன், தட்டச்சர்**

**C.C No. 50 /2021 D**ate: 20.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஆசாரி வேலை செய்து வருகின்றேன். அ.சா.1 சுபாஷினி என் அக்கா உறவினர் ஆவார். கடந்த 24.01.2021 அன்று இரவு 9.40 மணியளவில் ஸ்டார் கல்யாண மண்டபம் அருகே நின்று கொண்டு இருந்தேன். அப்போது என் அக்கா அ.சா.1 சத்தம் போட்டார். அருகே சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் எனது அக்கா அணிந்திருந்த தங்க செயினை பறித்து சென்று விட்டதாக கூறினார். நான் செயினை பறித்துச் சென்ற நபர்களை பின் தொடர்ந்தேன். அவர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றுவிட்டார்கள். நான் அவர்களை சரியாக பார்க்கவில்லை. பின்னர் கிழக்கு காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**C.C No.  50 /2021  D**ate: 20.10.2021

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை :**

**புகார் கொடுத்தவர் எனது அக்கா ஆவார். புகார்தாரர் எனது உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.**

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.<br><br>நீதித்துறை நடுவர் எண்-1<br>தஞ்சாவூர்(முகூபொ) |